நாள் 13.10.2022.
அ வ எண் 20/2021
வா சா 1 ஜெயராஜ்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது கால்வாயில் உரிமையில்லாதவர்கள் தண்ணீர் அடைக்கக்கூடாது என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனது தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட் சொத்தை பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறைதான் கண்காணிக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். எங்கள் கிராமத்தில் நீர்பாதுகாப்புக்குழு இருக்கிறதா என்றால் இருக்கிறது. அது பதிவு செய்யப்படவில்லை. அரசு சொத்தில் தனி நபர் மாற்றம் செய்தால் அது தண்டனைக்குரிய குற்றம் என்றால் சரிதான். நல்லபெத்தான்குளத்தின் தண்ணீர் கொள்ளவு எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு வி தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.